சுற்றறிக்கை எண். 1/2008/இ2

பேரூராட்சிகள் இயக்ககம்
குறளகம், சென்னை – 108.

நாள் : 25.1.2008

**சுற்றறிக்கை**

பொருள் : பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகளுக்கு தேவையான தெருவிளக்குகள், குடிநீர் உதிரிபாகங்கள், பொது சுகாதார பொருட்கள், எழுது பொருட்கள், வாகனங்கள் வாங்குதல் குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது.

பார்வை :

1. மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் எண். 73434/07/பே.1/நாள்.28.12.2007
2. ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண். 67859/07/ப3 நாள். 6.12.2007
3. தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் எண். 42/07/பேரூ/நாள்.27.12.2007
4. நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேமுநக. எண். 4326/07/யு2. நாள் : 27.12.2007
5. சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேமுநக.எண். 2223/07/43 நாள்.27.12.2007
6. திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேமுநக. எண். 4775/07/பே3 நாள்.21.12.2007
7. காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேமுநக.எண். 4738/07/பே.1 நாள்.27.12.2007
8. திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நக.எண். 991/07/அ1 நாள்.26.12.2007
9. வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நக எண். 1586/இ/நாள்.26.12.2007
10. சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நக எண். 4959/07/டி நாள்.28.12.2007
11. உதகை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித எண். 24799/07/ப3 நாள்.2.1.2008
12. திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித எண். 2615/07/பே/நாள்.2.1.2008
13. தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நேமுநக எண். பே3/1642/07/ நாள்.26.12.2007
14. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித எண். 3827/07/பி நாள். 4.1.2008
15. கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித எண் ந.க.எண். 7588/2007/பே3/4.1.2008

16. கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித எண் ந.க.எண். /07 நாள்.4.1.2008

பேரூராட்சிகளில் கொள்முதல் செய்யப்படும் தெருவிளக்குகள், குடிநீர் உதிரி பாகங்கள், பொது சுகாதாரப் பொருட்கள், எழுது பொருட்கள் மற்றும் வாகனங்கள் வாங்குல் குறித்து பார்வையில் காணும் 16 மண்டலங்களிலிருந்து அறிக்கை பெறப்பட்டு தற்போது நடைமுறையில் இருக்கும் கொள்முதல் கொள்கையை விரிவாக ஆராய்ந்ததில் பின்வரும் குறைபாடுகள் தெரிய வந்தது.

⑥ மண்டல அளவிலேயே குறிப்பாக மதுரை மண்டலத்தில் தெரு விளக்குகள் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கப்பட்டதில் பேரூராட்சிகளில் ஒன்றுக்கொன்று மிகுந்த விலை வித்தியாசம் உள்ளது. உதாரணமாக 250 வாட் சோடியம் ஆவி விளக்கு ஒன்று, முறையே விலை ரூ.525/–, ரூ.892/–, மற்றும் ரூ.650/–க்கு வாங்கப்பட்டுள்ளது, இதனால் மாவட்ட அளவிலேயே அதிக வித்தியாசமான விலைவிகிதங்களில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சிகளுக்கு நிதி இழப்பாகும்.

⑥ குடிநீர் உதிரி பாகங்கள் மாவட்ட கொள்முதல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வாங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருந்தும். சில பேரூராட்சிகளில் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால் அதிக விலையில் வாங்குவதாக தெரிய வருகிறது. இதனால் பேரூராட்சிக்கு அதிக செலவினம் ஏற்படுகிறது. இக்குறைபாடுகளை களையும்பொருட்டு அனைத்து பேரூராடசிகளிலும் ஒரே சீரான கொள்முதல் முறை நடைமுறைப்படுத்த பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது.

தெருவிளக்கு உதிரி பாகங்கள்

பேரூராட்சிகளுக்கு தேவையான தெருவிளக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் இந்திய தரச் சான்று அளிக்கப்பட்ட பொருட்கள் மட்டுமே உரிய முறையில் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

⑥ குறிப்பாக கிராம்டன் கிரீவ்ஸ் (Cromion Greaves) /பிலிப்ஸ் (Philips) / பஜாஜ் (Bajaj) போன்ற நிறுவனங்கள் தயாரிக்கும் தெருவிளக்கு உபகரணங்களை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998–ன்படி கொள்முதல் செய்யப்படலாம். கொள்முதல் மதிப்பு ரூ. 25.00 லட்சத்திற்குள் இருந்தால் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி நாளிதழிலும். ரூ.25.00 லட்சத்திற்கு மேல் இருந்தால் மாநில ஒப்பந்தப்புள்ளி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி பெற்று இறுதி செய்யலாம்.

⑥ தெருவிளக்கு உதிரிகளுக்கு ஆண்டு ஒப்பந்தம் இறுதி செய்யும்போது விலை விதங்கள் வெளி சந்தை விலை (Prevaiting Market Rate) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய விலைப்பட்டியலுடன் ஒப்பிட்டு மொத்த சில்லரை விலைக்கு (Maximum Retail Price) மிகாமல் இருக்க வேண்டும். மற்றும் அந்த மாவட்டத்திலுள்ள பிற பேரூராட்சிகளில் கொள்முதல் செய்யப்படும் விலைவிகிதங்கள் சீரான விலை விகிதத்தில் கொண்டிருத்தல் வேண்டும். (Uniform price)

⑥ அரசாணை எண். 223, ஊரக வளர்ச்சித் துறை. நாள் 19.12.1994ல் தெரிவித்துள்ளபடி தெருவிளக்கு சாதனங்கள் மாற்றுவதற்கான கால இடைவெளி பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி தெருவிளக்கு/உதிரி பாகங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| குழல் விளக்கு ஆண்டிற்கு | 2 | எண்ணிக்கை |
| சோக் ஒரு ஆண்டிற்கு (குழல்விளக்கு) | 1 | எண்ணிக்கை |
| ஸ்டார்ட்டர் ஒரு ஆண்டிற்கு (குழல் விளக்கு) | 3 | எண்ணிக்கை |
| சோடியம் விளக்கு 3 ஆண்டுகளுக்கு (பல்பு) | 2 | எண்ணிக்கை |
| சோக் மூன்று ஆண்டிற்கு (சோடியம் ஆவி விளக்கு) | 1 | எண்ணிக்கை |

⑥ அரசாணை எண். 149. ஊரக வளர்ச்சிக் துறை நாள். 16.7.1998ன்படி பேரூராட்சிகளுக்கு தேவைப்படும் தெருவிளக்கு சாதனங்களை ஐஎஸ்ஒ 9000/ஒஎஸ்ஐ தரச்சான்று பெற்றதாக இருக்க வேண்டும்.

குடிநீர் உதிரி பாகங்கள்

⑥ அரசாணை எண்.84, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 5.5.1998ன்படி மாவட்ட கொள்முதல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பேரூராட்சிகளுக்குத் தேவையான குடிநீர் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யப்படலாம். மாவட்ட அளவில் ஒரே சீரான விலை வீதம் நடைமுறைப்படுத்த ஏதுவாக மாவட்ட கொள்முதல் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டும். மாவட்ட கொள்முதல் குழுவினால் குடிநீர் உதிரிகள் அங்கீகரிக்கப்படவில்லை எனில் செயல் அலுவலர்களே குடிநீர் உதிரிகள் திறந்தவெளி ஒப்பந்தபுள்ளி விதிகள் 2000ன்படி கொள்முதல் செய்யலாம். கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் அளவு 3 மாதத்திற்குத் தேவையான பொருட்கள் மட்டுமே இருப்பில் வைக்கலாம், கொள்முதல் செய்யப்பட்டு நீண்டநாட்கள் இருப்பில் இருந்தால் இச்செயல் நிதி முடக்கம் ஆகும். எனவே சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொது சுகாதாரப் பொருட்கள்

⑥ குறிப்பாக பிளீச்சிங் பவுடர் ஒப்பந்தப்புள்ளி திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கொள்முதல் செய்யலாம். குறிப்பாக பிளீச்சிங்பவுடர். பினாயில், லார்விசைடு (Larvieide) விலைக்கு வாங்கும்பொழுது தயாரிப்பாளர்/விநியோகஸ்தர்களிடம் வாங்கப்பட வேண்டும். தரம் உறுதி செய்யப்பட வேண்டும். கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் அளவு தேவையான அளவு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் வைக்கலாம். தேவைக்கு அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டு இருப்பில் இருந்தால் அதனை நிதி முடக்கமாகத் கருதப்பட்டு சம்பந்தப்பட்டசெயல் அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். பினாயில்/பிளீச்சிங்பவுடர் ஆகிய பொது சுகாதாரப் பொருட்கள் வாங்கும் பொழுது தயாரிப்பாளர்/விநியோஸ்தர்களிடம் வாங்கலாம். தரம் உறுதி செய்யப்பட வேண்டும். இப்பொருட்கள் விலை வெளிச்சந்தை விலை/குடிநீர் வடிகால் வாரிய அட்டவணை விலை வீதம் ஆகியவற்றோடு ஒப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட வேண்டும்.

⑥ புகை தெளிப்பானுக்குத் (Fogging Machine) தேவையான மாலத்தியான் மற்றும் லார்விஸைடு அபேட், நுவான் மற்றும் பேடக்ஸ், போன்றவற்றை பொது சுகாதாரத் துறை துணை இயக்குநர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம்.

⑥ மாதாந்திரத் தேவையைக் கணக்கிட்டு பினாயில் கொள்முதல் செய்யலாம். தேவைக்கு அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டு நீண்ட நாட்கள் இருப்பில் இருந்தால் பொருட்கள் தரம் அற்றதாக மாறும் வாய்ப்பு உள்ளது.

எழுதுபொருட்கள்:

பேரூராட்சிகளுக்குத் தேவையான பதிவேடுகள் மற்றும் படிவங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு அச்சகத்தில் கொள்முதல் செய்யப்பட வேண்டும். எழுது பொருட்கள் மாவட்ட கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் கொள்முதல் செய்யப்படலாம்.

படிகள் (ஜெராக்ஸ்) எடுப்பதற்கு ஆண்டு ஒப்பந்தத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளவருக்கு ஆணை வழங்கப்பட்டு படிகள் எடுக்கலாம்.

வாகனங்கள் வாங்குதல்:

பேரூராட்சிகளுக்குத் தேவையான மோட்டார் வாகனங்கள் வாங்குவதற்கு இவ்வியக்க சுற்றறிக்கை எண் ந.க. 17352/2006/ஆ4/நாள் 1.1.2008 மற்றும் அரசாணை எண். 132. நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை. நாள் 9.6.1997ன்படி பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் நிர்வாக அனுமதி பெற்றே வாங்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள நெறிமுறைகள் தவறாமல் கடைபிடிக்கப்பட வேண்டும். தவறுபவர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட் நெறிமுறைகள் பேரூராட்சி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

இக்கடிதம் பெற்றமைக்கு உடன் ஒப்புதல் அனுப்பப்பட வேண்டும்.

**ஒம்/– கே .கோபால்**
இயக்குநர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சி செயல் அலுவலர்கள்
அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்

நகல்

இணை இயக்குநர்/செயற்பொறியாளர்
கணக்கு அலுவலர்/உதவி இயக்குநர்/திட்ட ஆராய்வாளர்
பேரூராட்சிகள் இயக்குநரின் நேர்முக எழுத்தர்
அனைத்துப் பிரிவு கண்காணிப்பாளர்கள்
இ2 (இருப்புக்கோப்பு)